DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: DV.C. No.12 /2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : திருமதி.ஜோதி

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.02.2026

---

**குறுக்கு விசாரணை தொடர்சச்சி**

1.எனக்கும் 1ம் எதிர்மனுதாரர் முனியராஜ்க்கும் ஏற்பட்ட திருமணத்தின்போது இருவீட்டாரின் ஆட்களும் இருந்தார்கள். வழக்கு விவரஙகள் அனைத்தும எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் திருமுணத்தின் வரவேற்பு நிகழ்ச்சி கைகாட்டியில் உள்ள வாடகை வீட்டில் நடைபெற்றது. திருமணத்தின்போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுககப்பட்டது என்றால்சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும் 1ம் எதிர்மனுதாரரும கைகாட்டியில் உள்ள வாடகை வீட்டில் வாழ்நது வந்தோம். கைகாட்டி வாடகை வீட்டில் சுமார் 1 மாதத்திற்கு மேல் இருந்தோம் அதன்பிறகு கோயம்புத்துாருக்கு சென்றுவிட்டோம்.கோயம்புத்துாரில் ஒரு மாதத்திற்குமேல் இருந்தோம்.

2. திருமணத்திற்குமுன்பு 1ம் எதிர்மனுதாரர் என்ன வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியும். அவரது நண்பர் ஒருவருடன் சேர்ந்து கோயம்புத்துார் அன்னுார் அருகே ஓட்டல் வைத்திருநதார். நான் 2021-2022 காலகட்டத்தில் எனது நகைகளை வங்கியில் அடமானம்வைத்து மேற்படி ஓட்டல் நடத்துவதற்கு 1ம் எதிர்மனுதாருக்கு பணம் கொடுததேன் எனசொல்லியிருப்பது சரியா என்றால் சரிதான். நான் மேற்படி நகை அடமானம் வைத்த விவரம் எனது வீட்டாருக்கு தெரியுமா என்றால் அடமானம்

வைத்த பின்தான் தெரியும் அதறகு முன் தெரியாது. 2021-2022 கொரோனா கால கட்டம் என்றால் கொரோனாவனது முடிவுக்கு வந்துவிட்டது. மேற்படி காலகட்டத்தில் உணவகங்கள் எதுவும் செயல்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வைத்துள்ள ஓட்டல் நன்றாக செயல்பட்டது. நான் நகையை அடமானம் வைத்து கொடுத்த பணத்தை எனது உடனபிறந்த சகோதரரை அந்த ஓட்டலில் பார்ட்னராக சேர்க்க கொடுததேன் என்றால்சரியல்ல.

3.மேற்படி நான் பணத்தைதிரும்ப கேட்டு 1ம் எதிர்மனுதாரர் கொடுக்காததால் ஏற்பட்ட பிரச்சனையானது கோயம்புத்தூரில் ஏற்பட்டது என்றால் சரிதான். 18.06.2022 தேதியன்று திருவாடானைஅனைத்துமகளிர் காவல் நிலையத்தில் குற்றஎண்.6/2022 வழககு பதிவுசெய்து அந்த வழக்கில் ராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரர் முன்பிணை மனு தாக்கல்செய்து அந்த முன்பிணை மனுவில் ஏற்பட்ட உத்தரவில் நான்கு பவுன் நகை என்னிடம ஒப்படைக்க உத்தரவிட்டு நான்அதை பெற்றுகொண்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது இந்த நீதிமன்றத்தில் சிசி.எண்.69/2023 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி வழககில் உள்ள பரிகாரமுமஇந்த வழக்கில் உள்ள பரிகாரமும் ஒன்றுதான் என்றால் சரியல்ல,. அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பதிவுசெய்த முதல்தகவல் அறிக்கையானது ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுதத புகாரின் பேரில் அது அந்த காவல்வ நிலையத்திற்கு அனுப்பப்பட்டு பதிவுசெய்த முதல்தகவல்அறிக்கை என்றால் சரிதான். கடந்த 08.09.2014 தேதி தொண்டி அருகே உள்ள நரிகுடி கிராமத்தை சேர்நத் ஆரோக்கியம் என்பவரின் மகனான தர்மராஜ் என்பவருக்கும் எனக்கும் திருவாடானை ஆதிரத்தினேஸ்வரர் ஆலயத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால சரிதான். மேற்படி விவரத்தை இந்தவழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தெரிவித்துளளேன். விவாகரத்து ஏற்பட்ட விவரத்தையும் தெரிவித்துள்ளேன். விவகாரத்து ஏற்பட்ட நீதிமன்ற உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

5.எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு திருவாடானை ஆதி ரத்தினேஸ்வரர் கோயிலிலிருந்து ரசீது பெற்றோமா என்றால் பெற்றோம்.மேற்படி ரசீதை இவவழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. மேற்படி ரசீது பெறவேண்டும என்றால் முதல் திருமண சான்றும் அதன்பின் நீதிமன்ற விவாகரத்து உத்தரவும் மேலும் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து மறுமண சான்றும் பெற்று கொடுக்கவேண்டும் என்றால் அப்போது கொரோனா நேரம் என்பதால் ஒருவாரம் சென்று வந்து பெற்றுகொள்ளுங்கள் என கோவில் நிர்வாகத்தில் தெரிவித்தார்கள். நான் மேற்குறிப்பிட்ட சான்றுகள் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். கொரோனா காலம் என்பதால் வாங்கவில்லை. கொரோனா காலகட்டத்தில் ஊரடங்கு உத்தரவு இருந்ததால் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அதன்பின் தான் எங்கள் திருமணம் நடந்தது என்றும் நான் வழக்ககிற்காக பொயயாக சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் திருமணங்கள் நடந்தது.

6.நான் எனது முதல் திருமணத்தை மறைத்து 1ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்ததால்தான் மேற்சொன்ன சான்றுகள் எதையும் நான் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் சீர்வரிசை பட்டியல் நகலை தான் தாக்கல் செய்துள்ளேன். அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சீர்வரிசை பொருட்கள் தொடர்பான புகைப்படங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதலாவது திருமணம் செய்த தர்மராஜ் என்பவர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண். 5/2015 கீழ் குடுமப வன்முறை புகார் கொடுதேதேன் என்றால் சரிதான். தர்மராஜ் மற்றும் அவரது குடும்பத்தார் குடும்ப வன்முறை இழைத்தார்கள் அதனால் புகார் கொடுத்தேன். மேற்படி தர்மராஜ் மீது DVC3/2018 கீழ் இந்த நீதிமனறத்தில் குடும்ப வன்முறை வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. மேற்படி வழககில் எனக்கும் தர்மராஜ்க்கும் சமரசம் எற்பட்டு அவரிடமிருந்து நான் 08.12.2018 தேதி மக்கள் நீதிமன்றத்தில் ஏற்பட்ட முடிவின் வாயிலாக ரூ2,10,000 பெற்று கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி தொகையானது தர்மராஜ் மீது போட்ட இரண்டு வழக்குகளையும் திரும்ப பெறுவதற்காக கொடுக்கப்பட்ட தொகை என்றால்

சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் எனக்கு மூன்றாவதாக மற்றொரு நபருடன் திருமணம் நடைபெற்றுள்ளது. விவாகரத்து பெற்றுதான் திருமணம் செய்தேன். தேவகோட்டை வட்டம் திரிசூழ் கிராமத்தை சேர்ந்த திருநாவுக்கரசு மகன் வல்லத்தரசு என்பவருடன் தான் திருமணம் நடைபெற்றது என்றும் மேறபடி நபருடன் ஏற்பட்ட திருமணத்திற்கு நிபந்தனையாக கடந்த 13.06.2025 தேதி திருவாடானை சார்ப்பதிவாளர் அலுவலகத்தில் வல்லதரசு என்பவருக்கு சொந்தமான சொத்தை நான் பவர்பத்திரம் மூலம் எழுதி வாங்கி கொண்டுதான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். நான் ஒவ்வொரு முறை திருமணம் செய்யும்போது சரியான முகாந்திரமும் ஆதாரமும் இல்லாமல் திருமணம் செய்தவர் மீது வழக்கு தொடர்ந்து ஆதாயம் பெற்றுவருகிறேன் என்றால் சரியல்ல. நானும் 1ம் எதிர்மனுதாரரும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்த காலத்தில் நான் கருத்தரித்து அந்தகருவை அழித்துவிட்டேன் என்றால் சரியல்ல. கருவுற்றேன் ஆனால் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் என்னை சரியாக கவனிக்காததால் அந்த கரு தானாக கலைந்துவிட்டது.

8.எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து வைத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து வைத்த விவரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி பஞ்சாயத்து பேசிய நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்தால் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான்.நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பரிகாரத்திற்கான ஆவணங்களை இந்தவழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.அனைத்துமகளிர் காவல்நியைலத்தின் வாயிலாக ஏற்பட்டுள்ள குற்ற வழக்கின் பரிகாரமும் இந்த வழக்கின் பாரிகாரமும் ஒன்றாக இருப்பதால் இந்த வழக்கானது தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.இரண்டும் வெவ்வேறு வழக்காகும்.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.